1970 மார்ச் 12]

திரு. ஆர். கருப்பையா : 83-வது விதியின் கீழ் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது எவ்வப்போது பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பலாம் என்பது பற்றியது. தாங்கள் இப்போது எழுப்புகிற பாயின்ட் ஆப் ஆர்டர் எந்த விதியின் கீழ் ?

திரு. ஆர். கருப்பையா : எக்ஸ்ப்ளனேஷன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நான் அனுமதிக்க முடியாது.

THIRU V. GEORGE : Sir, on a point of order. The proceedings of the House are governed not only by the Assembly Rules but also by May's Parliamentary Practice and the provisions of the Constitution. We cannot have at the fingertips all the rules. So, the hon. Member's freedom to raise a point of order should not be restricted.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய விதிமுறைகளில் தெளிவு ஏற்படாதபோதுதான் மேல் பார்லிமெண்டரி ப்ராக்டிஸைப் பார்க்கவேண்டுமே தவிர, இது தெளிவாக இருக்கும் போது இதை விட்டுவிட்டு அதற்குப் போகவேண்டுமென்பதில்லை.

(7) அரசினர் தீர்மானங்கள்.

(அ) மதிப்பீட்டுக் குழுவிற்குத் தேர்தல்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : "பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு சட்டப் பேரவையின் 164-வது விதியின் கீழ் 1970-71-ம் ஆண்டுக்குரிய மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி பதினுறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் நிச்சயிக்கும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்" என்கிற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

(4) அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) மதிப்பீட்டுக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ் மதிப்பீட்டுக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 18—3—1970 புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள் வேண்டுவோர் செயலாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 20—3—1970 வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்குப் பயசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 21—3—1970 சனிக்கிழமை மாலை 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதினாறுக்கு மேற்படுமாயின் 26—3—1970 வியாழக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே வாக்கெடுப்பு நடைபெறும்.

(7) அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) பொதுக்கணக்காய்வுக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு சட்டப் பேரவையின் 173-வது விதியின் கீழ் 1970-71-ம் ஆண்டுக்குரிய பொதுக்கணக்காய்வுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் நிச்சயிக்கும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்" என்கிற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

(4) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) பொதுக்கணக்காய்வுக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒற்றை மாற்று வாக்கு முறைப் படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதி முறைகளின் கீழ் பொதுக்கணக்காய்வுக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 18—3—1970 புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாள ரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 20—3—1970 வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 21—3—1970 சனிக்கிழமை மாலை 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதினாறுக்கு மேற்படுமாயின் 26—3—1970 வியாழக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே வாக்கெடுப்பு நடைபெறும்.